திருப்பூரில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.4.2026) தமிழ் சுவிசேஷ லுத்ரன் திருச்சபையின் துணைத் தலைவர் அருட்தந்தை ஸ்டான்லி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கிறிஸ்துவ மக்களின் நல்வாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்களை கழக அரசு செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தினேஷ்குமார் உடன் உள்ளார்.

சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் அஸ்தம்பட்டி பகுதி 8வது கோட்டத்தில் உள்ள சின்னதிருப்பதியில் வீதி வீதியாக சென்று வாக்குகள் சேகரித்தார் உடன் மாமன்ற உறுப்பினர் மூர்த்தி கூட்டணி கட்சி நிர்வாகிகள் இருந்தனர்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு குமாரபாளையம் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் கொக்கு எஸ். பாலுவை ஆதரித்து திண்டுக்கல் லியோனி தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். கொக்கராயன்பேட்டை, சந்தப்பேட்டை, அக்ரஹாரம் உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரித்தார். இந்த நிகழ்ச்சிகளில் பள்ளிபாளையம் நகர செயலாளர் குமார், பள்ளிபாளையம் வடக்கு ஒன்றிய செயலாளர் இளங்கோவன், ஆலம்பாளையம் பேரூர் செயலாளர் கார்த்திக்ராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ரவி உள்ளிட்ட திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பாப்பிரெட்டிபட்டி சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் மெனசி,வெப்பாலப்பட்டி,வீரபத்திரன் கோவில்,உள்ளிட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.உடன் ஒன்றிய செயலாளர் பி.எஸ். சரவணன்,மற்றும் மக்கள் நீதி மையம் கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் உள்ளனர்.

நாடாளுமன்றத்தில் தொகுதி மறு சீரமைப்பு தமிழக மக்களுக்கு அநீதி இழைக்கும் என்று தமிழக முதல்வர் கூறியிருந்தார். மேலும் மறு சீரமைப்பு சட்டம் கொண்டு வந்தால் பழைய திமுகவை பார்க்க நேரிடும் என எச்சரிக்கை செய்திருந்தார் இந்நிலையில். நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பின்போது மறு சீரமைப்பு மசோதா தோல்வி அடைந்ததையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக மாவட்ட செயலாளர் மதியழகன் எம் எல் ஏ தலைமையில் கிருஷ்ணகிரி ரவுண்டானாவில் பட்டாசு வெடித்து, பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், தொகுதி பொறுப்பாளர் பார். இளங்கோவன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி, ஒன்றிய செயலாளர்கள் தனசேகர், மகேந்திரன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், கழக தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திமுக முதன்மைச் செயலாளரும் திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளரும் அமைச்சருமான கே.என்.நேரு 62 வது வார்டு பஞ்சப்பூர், செங்குறிச்சி, செட்டியபட்டி, ராமச்சந்திரா நகர், கே.ஆர். எஸ். நகர், சீனிவாசன் நகர் ஆர் எம் எஸ் காலனி,புது தெரு, எடமலைப்பட்டி புதூர், ராமச்சந்திரா நகர் உள்ளிட்ட பகுதிகளில் சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பெண்கள் கும்ப மரியாதை கொடுத்தும் ஆரத்தி எடுத்தும் தங்கள் ஆதரவை தெரிவித்தனர். அப்போது தங்கள் ஆதரவு உங்களுக்கே என்றும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து உங்களை வெற்றி பெற வைப்போம் என்றும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். அவருடன் மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்டத் துணைச் செயலாளர் முத்து செல்வம், பொதுக்குழு உறுப்பினர்கள் காஜா மலைவிஜய், கிராப்பட்டி செல்வம், பகுதி செயலாளர் மோகன்தாஸ், மாவட்ட மகளிர் அணி செயலாளர் கவிதா, மண்டலக் குழுத்தலைவர் துர்கா தேவி,கவுன்சிலர் சுபா, அய்யல்சாமி, என்ஜினீயர் நித்தியானந்த், கம்யூனிஸ்டு கவுன்சிலர் சுரேஷ், சிவா, எஸ்டிபிஐ கட்சியினர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர். மத்திய அரசின் தொகுதி வரையறையை கண்டித்து அமைச்சர் கே.என்.நேரு, கருப்பு சட்டை அணிந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் திமுக சார்பில் போட்டியிடும் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திருப்பனந்தாள் சுற்றுவட்டார பகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். உடன் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் உள்ளனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ராசிபுரம் நகரம் அச்சுக்கட்டி தெரு மற்றும் சேலம் சாலையில் உள்ள பள்ளிவாசல்களில் இஸ்லாமியர்களை சந்தித்து தீவிர வாக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இந்நிகழ்ச்சியில் நகர கழகச் செயலாளர் என்.ஆர்.சங்கர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் விராலிமலை சட்டமன்ற தொகுதியின், கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் விராலிமலை மேற்கு ஒன்றியம் கசவனூரில் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். நிகழ்வில் த.சந்திரசேகரன், க.மதியழகன், அ.இளங்குமரன், ராஜசேகரன், கை.பழனிச்சாமி மற்றும் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் என்.அசோக்குமார் துறவிக்காடு கிராமத்தில் வயலில் நடவு பணி செய்து கொண்டிருந்த விவசாய தொழிலாளர்களிடம் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.